(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 62.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2023 ஒக்டோபர் 04 புதன்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கமத்தொழில் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ ஜீவன் தொண்டமான்,** நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி நிமல் சிறிபால த சில்வா,** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ நலின் பிரனாந்து,** வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ ஹரின் பிரனாந்து,** சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல,** சுகாதார அமைச்சர்

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி பவித்ராதேவி வன்னிஆரச்சி,** வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். யூ. எம். அலி சப்ரி,** வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல,** சுகாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அ. அரவிந்த் குமார்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) டயனா கமகே,** சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிறிபால கமலத்,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்,** கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாமர சம்பத் தசனாயக,** ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த,** நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக்க பிரியந்த,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கே. காதர் மஸ்தான்,** கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ச. வியாழேந்திரன்,** வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி தலதா அதுகோரல**

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ வஜிர அபேவர்தன**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்**

**கௌரவ தவராஜா கலை அரசன்**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ திஸகுட்டி ஆரச்சி

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர

கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ அகில எல்லாவல

கௌரவ லலித் எல்லாவல

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ சட்டத்தரணி லசக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ லலித் வர்ண குமார

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ ஜனக பண்டார தென்னகோன்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ எச். நந்தசேன

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி

கௌரவ உத்திக பிரேமரத்ன

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ சட்டத்தரணி எஸ். எம். எம். முஸ்ஸாரப்

கௌரவ சட்டத்தரணி அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ சீ.பீ. ரத்நாயக்க

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ மஹிந்த ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ நிமல் லான்சா

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ காமினி வலேபொட

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ குமார வெல்கம

கௌரவ சிவஞானம் சிறீதரன்

கௌரவ ஜகத் சமரவிக்ரம

கௌரவ ஜயந்த சமரவீர

கௌரவ மைத்ரீபால சிறிசேன

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி

கௌரவ வடிவேல் சுரேஷ்

கௌரவ சட்டத்தரணி டப்ளியூ. டீ.ஜே. செனவிரத்ன

கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்

கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்

கௌரவ அப்துல் ஹலீம்

கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்

கௌரவ விஜித ஹேரத்

கௌரவ ஜயரத்ன ஹேரத்

கௌரவ சமன்பிரிய ஹேரத்

கௌரவ மர்ஜான் பளீல்

**கௌரவ ஏ.எச்.எம். பௌஸி**

திரு. சமிந்த குலரத்ன, பதில் பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. **சபாநாயகரின் அறிவித்தல்கள்:** பிரதிச் சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:— "அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 'நிகழ்நிலைக் காப்பு' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு மனுக்களின் பிரதிகள் கௌரவ சபாநாயகர் அவர்களுக்கு கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்."

2. **பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) பிரதிச் சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 34 ஆம் பிரிவின் பிரகாரம், தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்டு, நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அவதானிப்புகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் 2024 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டினைச் சமர்ப்பித்தார்.

இப்பாதீட்டு மதிப்பீடானது அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) பிரதிச் சபாநாயகர், 2022 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் முதலாவது தொகுதியின் XV, XVI, XVII, XVIII, XIX மற்றும் XX ஆம் பகுதிகளையும், நான்காவது தொகுதியின் III, IV, V மற்றும் VI ஆம் பகுதிகளையும், ஐந்தாவது தொகுதியின் IV மற்றும் V ஆம் பகுதிகளையும் மற்றும் ஆறாவது தொகுதியின் III, IV மற்றும் V ஆம் பகுதிகளையும் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(3) பிரதிச் சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பத்தாவது தொகுதியின் தவறான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது ஒன்று சேர்க்கப்பட்ட வாகனங்களின் செசி இலக்கம் மற்றும் இன்ஜின் இலக்கத்தை மோட்டார் வாகனங்களை பதிவு செய்யும் தரவு முறைமைக்குள் மோசடியாக தரவுகளை உள்ளடக்கி மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்வது போலியான சான்றிதழ்களை வழங்குவது தொடர்பான 2022 இன் விசேட கணக்காய்வு அறிக்கையின் - III ஆம் பகுதியைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

3. **குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா சார்பாக அக்குழுவின் உறுப்பினர், கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளைகள் தொடர்பான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

மஹரகம, தம்பஹேன வீதி, இல. 10/ஏ யில் வதியும் திரு. டப்ளியூ. ராஜ் மென்டிஸ் அபேசேகரவினது 2023.06.16 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ பியங்கர ஜயரத்ன சமர்ப்பித்தார்.

மேற்படி மனு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**5. இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கைப் பொறுப்புச் சட்டமூலம் :** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"இச்சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக"என சுகாதார அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

(பி.ப. 12.35 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ சட்டத்தரணி எஸ். எம். எம். முஸ்ஸாரப் தலைமை தாங்குவாராக" என பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.12 மணிக்கு கௌரவ சட்டத்தரணி எஸ். எம். எம். முஸ்ஸாரப் தலைமை தாங்கினார்.)

"கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே தலைமை தாங்குவாராக" என வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.38 மணிக்கு கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே தலைமை தாங்கினார்.)

(பி.ப. 4.46 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என சுகாதார அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 மற்றும் 2 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

3 ஆம் வாசகம்

3ஆம் பக்கத்தில் 23 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு சுகாதார அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "ஆகுசெலவை அந்நாடுகளிலிருந்து அறவிடுதலும்:
>
> ஆயின், எவ்வாறாயினும், இப்பந்தியின் நியதிகளின் படி விழிவெண்படலங்களையும் வேறு இழையங்களை யும் வழங்குவதில், எல்லாச் ந்தர்ப்பங்களிலும், அரசாங்க வைத்தியசாலைகளினாலும் இலங்கைப் பிரசைகளினாலும் செய்யப்பட்ட கோரிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுதல் வேண்டும்." ;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 ஆம் வாசகம்

4 ஆம் பக்கத்தில் 1 முதல் 4 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு சுகாதார அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> “(i) (இதனகத்துப்பின்னர், "தவிசாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சபையின் தவிசாளராகச் சேவையாற்றவேண்டிய சுகாதாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்;
>
> (ii) சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதி;”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 முதல் 7 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

8 ஆம் வாசகம்

7 ஆம் பக்கத்தில் 20 ஆம், 21 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு சுகாதார அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> “போது, சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய கூட்டத்திற்கு தலைமைதாங்குதல் வேண்டும்.”

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9 மற்றும் 10 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

11 ஆம் வாசகம்

10 ஆம் பக்கத்தில் 17 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு சுகாதார அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> “கொள்கைக்கு இணங்க சுகாதார அமைச்சின் கலந்தாலோசனையுடன் சபையினால் ”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

11 ஆம் பக்கத்தில் 31 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு சுகாதார அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> “அசையா மானியக் கொடைகள் கொடைகள், நன்கொடைகள் மற்றும் மரணசாதனக் கொடைகளை”;

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

12 ஆம் பக்கத்தில் 11 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு சுகாதார அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"வசதிப்படுவதற்கு இச்சட்டத்தினால் அதிகாரமளிக்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

12 முதல் 17 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

18 ஆம் வாசகம்

15 ஆம் பக்கத்தில் 29 ஆம், 30 ஆம் வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு சுகாதார அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"அறிக்கையுடன் சேர்த்து அவ்வாண்டுக்கான நம்பிக்கைப்பொறுப்பின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளும் இணைக்கப்படுதல்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

16 ஆம் பக்கத்தில் 4 ஆம், 5 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு சுகாதார அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"கவனத்திற்கொள்ளப்படுவதற்காக அத்தகைய அறிக்கையை பட்டியலில் இடுதல் வேண்டும்..";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

19 முதல் 26 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

27 ஆம் வாசகம்

21 ஆம் பக்கத்தில் 24 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு சுகாதார அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"கட்டணங்கள்;";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

28 ஆம் பக்கத்தில் 11 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு சுகாதார அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"வேண்டிய நடவடிக்கைமுறைளூ அத்துடன்

(ஊ) விழிவெண்படலங்களுக்கான மற்றும் வேறு இழையங்களுக்கான கோரிக்கைகளின் இலத்திரனியல் சமர்ப்பிப்புத் தொடர்பான கருமங்கள்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

28 மற்றும் 29 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

30 ஆம் வாசகம்

24 ஆம் பக்கத்தில் 11 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு சுகாதார அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"மர்த்தப்படுதல் வேண்டும்.

(4) இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர்ஆனால் விழிவெண்படலத்துக்கான மற்றும் வேறு இழையங்களுக்கான கோரிக்கைகளின் இலத்திரனியல் சமர்ப்பிப்பு தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி நடைமுறைக்குவரும் தேதிக்குமுன்னர் செய்யப்படும் விழிவெண்படலத்துக்கான மற்றும் வேறு இழையங்களுக்கான ஏதேனும் கோரிக்கை, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்தின்கீழ் செல்லுபடியான முறையில் செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க விளித்துரைக்கவும்படலாம்.".

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

31 மற்றும் 32 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

"சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என சுகாதார அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**6. சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல. 1 ) :** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— ( 235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வை வரி தொடர்பில் 2023.09.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2023 யூன் 16 ஆம் திகதிய 2336/72 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல. 2 ) :** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— ( 235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வை வரி தொடர்பில் 2023.09.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

( 2023 யூன் 30 ஆம் திகதிய 2338/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல. 3 ) :** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— ( 235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வை வரி தொடர்பில் 2023.09.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

( 2023 யூலை 21 ஆம் திகதிய 2341/64 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1 ) :** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 மே 17 ஆம் திகதிய 2332/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.09.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2 )** : பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 மே 20 ஆம் திகதிய 2332/53 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.09.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3 )** : பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் பதில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 யூன் 22 ஆம் திகதிய 2337/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.09.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**12. விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4 )** : பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 யூன் 13 ஆம் திகதிய 2340/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.09.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**13. அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்:** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 153 ஆவது உறுப்புரைக்கு அமைய, சனாதிபதியினால் அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்தின் கீழ் கணக்காய்வாளர் தலைமையதிபதி நியமிக்கப்பட்டுள்ளதாலும்;

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் சம்பளம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம், பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டு அரசாங்க திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்பட வேண்டியுள்ளதாலும்;

சனாதிபதியினால் 2023 ஆகஸ்ட் 28 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தை 2023 செப்டம்பர் 04 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில்கருத்திற்கொண்டு கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு ஓய்வூதிய உரித்துடனான கொடுப்பனவினை கீழ் குறிப்பிடப்பட்டவாறு செலுத்துவதற்கு அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாலும்:—

(அ) கணக்காய்வாளர் தலைமையதிக்கு 2019.07.01 ஆம் திகதி தொடக்கம் 2022.12.31 ஆம் திகதி வரை ஓய்வூதிய உரித்துடனான ரூபா 25,000.00 மாதாந்தக் கொடுப்பனவொன்றினை வழங்குவதற்கும்;

(ஆ) அந்த ரூபா 25,000.00 கொடுப்பனவினை 2023.01.01 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் ஓய்வூதிய உரித்துடனான ரூபா 50,000.00 கொடுப்பனவு வரை அதிகரிப்பதற்கும்

அதற்கேற்ப, இலங்கை சனநாயச் சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 153(2) உறுப்புரைக்கமைய, கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அரசாங்கத் திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்படுமாறு மேற்கூறப்பட்ட ஓய்வூதிய உரித்துடனான கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**14. ஒத்திவைப்பு:** “இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” என பாராளுமன்ற சபை முதல்வர் பிரேரித்தார்.

அவ்வேளை நேரம் பி.ப. 5.30 மணியாகிவிடவே பிரதிச் சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2023 ஒக்டோபர் 05 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.